# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

## புவியியல்

Zonal Education Office- Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office

சுட்டெண் ........................................................ தரம்: 7 நேரம் - 2.00 மணித்தியாலம்

### பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக..**

**1 - 5 வரையான வினாக்களுக்கு சரியான விடையின்கீழ் கோடிடுக.**

1. கோளத்தின் மத்தியில் கிடையாக அமைந்துள்ள $0^0$ அகலக்கோடு
   1. மகரக்கோடு 2. மத்தியகோடு 3. கடகக்கோடு 4. ஆட்டிக்வட்டம்

2. உலகின் மிகச்சிறிய கண்டம்
   1. ஆபிரிக்கா 2. ஆசியா 3. ஐரோப்பா 4. அவுஸ்திரேலியா

3. இலங்கையின் தற்போதைய எழுத்தறிவு வீதம் எவ்வளவு?
   1. 90% 2. 92% 3. 94% 4 80%

4. புவி தனது அச்சில் தன்னைத் தானே சுற்றுவதற்கு எடுக்கும் காலம்
   1. 365 மணித்தியாலங்கள் 2. 24 மணித்தியாலங்கள்
   3. 26 மணித்தியாலங்கள் 4. 30 மணித்தியாலங்கள்

5. இலங்கையின் ஆள்புலக் கடல் எல்லையின் தூரம் யாது?
   1. 12 கடல்மைல் 2. 24 கடல்மைல் 3. 200 கடல்மைல் 4. 21 கடல்மைல்

**6 - 10 வரையான வினாக்களுக்கு சரியாயின் ( √ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளமிடுக.**

6. புவி மேற்பரப்பு 60% நீரினால் சூழப்பட்டுள்ளது. ( )

7. புவி மேற்பரப்பின் பரப்பளவு 510 பில்லியன் சதுர கிலோமீற்றர் ஆகும். ( )

8. இலங்கையின் நீளம் 432 கிலோமீற்றர் ஆகும். ( )

9. இயற்கையாக உருவான உலக மரபுரிமைகளுள் ஒன்று சிங்கராஜ காடு ஆகும். ( )

10. இலங்கை அயன வலயத்தில் அமைந்துள்ள நாடாகும். ( )

**11 - 15 வரையான வினாக்களுக்கு சரியான சொற்களை தெரிவுசெய்து இடைவெளி நிரப்புக.**

(1994, 1984, சிந்து, பசுபிக், நெடுங்கோடுகள், அகலக்கோடுகள், மலைகள், 12714KM, 12814KM)

11. சர்வதேச சமுத்திரச்சட்டம் ........................................... ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது.

12. புவியின் முனைவு விட்டம் .................................................................. ஆகும்.

13. கடல் மட்டத்திலிருந்து 300M க்கு மேற்பட்ட உயரத்தில் உள்ள நிலங்களில்.................................... கொண்ட நிலத்தோற்றத்தைக் காணலாம்

14. இலங்கை .................................................. சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது.

15. பூகோளத்தின் வடமுனைவு, தென்முனைவு என்பவற்றை இணைத்து வரையப்படும் கோடுகள் ........................................ என அழைக்கப்படும்.

**16 - 20 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமானவற்றை தெரிவு செய்து தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 16. உள்ளகச் சமவெளி | நெடுங்கோடு |
| 17. சர்வதேச தேதிக்கோடு | முருகைக்கற் பாறைகள் |
| 18. ஹிக்கடுவ | எச்சக்குன்று |
| 19. கொக்கல | நீர்வீழ்ச்சி |
| 20. மத்திய மலைநாடு | சுதந்திர வர்த்தக வலயம் |

( 20X2= 40 புள்ளி )

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடைதருக.**

01) உலகப் புறவுருவப்படத்தை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்

1. A எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கண்டம் எது?
2. B என்ற எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சமுத்திரம் எது?
3. C என்ற எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நாடு எது?
4. D என்ற எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கடல் எது?
5. E என்ற எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கடல் எது?
6. F என்ற எழுத்தினால் காட்டப்பட்டுள்ள தீவு எது? ( 6X2= 12 புள்ளி )



02) 1. புவிச் சுற்றுகை என்றால் என்ன?

2. புவியின் பிரதான அகலக்கோடுகள் நான்கினைப் பெயரிடுக.

3. கண்டங்கள் ஐந்தினைப் பெயரிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

03) 1. உலர் வலயத்தில் காணப்படும் தேசிய பூங்காக்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

2. யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் அதனை அண்டிய தீவுகளிலும் இடம்பெறும் பொருளாதார நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

3. மத்திய மலைநாட்டின் நிலத்தோற்றப் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

04) 1. இலங்கையில் காணப்படும் தரைத்தோற்றப் பிரிவுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

2. மத்திய மலைநாட்டில் காணப்படும் பௌதீக அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

3. கரையோரச் சமவெளியில் காணப்படும் பௌதீக அம்சங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

05) 1. சார்பு அமைவிடம் என்றால் என்ன?

2. இலங்கை தவிர இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள தீவுகள் நான்கினைக் குறிப்பிடுக.

2. இலங்கையின் தனி அமைவிடத்தினைக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

06) 1. தேசிய மரபுரிமைகள் என்றால் என்ன?

2. இலங்கையில் மனிதனால் உருவாக்கப்பட்ட மரபுரிமைகள் நான்கினைக் குறிப்பிடுக.

3. மரபுரிமைகளை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும் என்பதற்கான இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

07) 1. தேசப்படம் ஒன்றின் அடிப்படை அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

2. படங்களை பிரதி செய்வதற்கு பயன்படுத்தப்படும் முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

3. தேசப்படம் ஒன்றினால் கிடைக்கும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)